Ontario

செய்தி வெளியீடு

நிதி அமைச்சகம்

ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்

ஒன்ராறியோவின் 2026 இலையுதிர் காலப் பொருளாதார அறிக்கை, தொழிலாளர்களைத் தொடர்ந்து பாதுகாத்து, முக்கிய தொழில்துறைகளை வலுப்படுத்தி, எதிர்காலத்தின் நல்ல ஊதியம் தரும் வேலைகளைப் பாதுகாக்கிறது.

செய்திகள்

ஒக்டோபர் 29, 2026

ரொறன்ரோ — இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy *ஒன்ராறியோவின் பொருளாதார மற்றும் நிதி மதிப்பாய்வு* அறிக்கையை வெளியிட்டார். *ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்;* ஒன்ராறியோவின் தொழிலாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை இது முன்னெடுத்துச் செல்வதுடன், G7 நாடுகளில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த, மீள்திறன் கொண்ட மற்றும் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசாங்கம், கட்டணத் தீர்வைகளால் (tariffs) பாதிக்கப்பட்டுள்ள முக்கிய தொழில்துறைகளை வலுப்படுத்த முதலீடு செய்து வருகிறது. அதே வேளையில், ஒன்ராறியோவின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதன் மூலம், மேம்பட்ட உற்பத்தி, முக்கியமான கனிமங்களின் சுரங்கம் மற்றும் சுத்திகரிப்பு, செயற்கை நுண்ணறிவு, பாதுகாப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகளில் நல்ல ஊதியம் தரும் வேலைவாய்ப்புகளை ஈர்க்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒன்ராறியோவின் தொழிலாளர்கள், குடும்பங்கள் மற்றும் வணிகங்கள் ஆகியன U.S. இன் தொடர்ச்சியான வர்த்தக நடவடிக்கைகள், புவிசார் அரசியல் ஸ்திரமின்மை மற்றும் ஒட்டுமொத்த உலகப் பொருளாதார நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றால் தொடர்ந்து குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்த சவால்கள் இருந்தபோதிலும், ஒன்ராறியோவின் நிதித் திட்டம், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்பச் செயல்படும் நெகிழ்வுத்தன்மையைப் பேணுவதோடு, குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் தேவைப்படும் மிகவும் முக்கியமான முன்னுரிமைகளில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது. இத்தகைய வெளிப்புறக் காரணிகளைக் கருத்தில் கொண்டு, *2026 ஒன்ராறியோவின் பொருளாதார மற்றும் நிதி மதிப்பாய்வில்* முன்வைக்கப்பட்டுள்ள ஒன்ராறியோவின் நிதிநிலை முன்னறிவிப்பு 2029-30 நிதியாண்டில் சமநிலையான வரவுசெலவுத் திட்டத்தை எட்டுவதற்கான பாதையைக் காட்டுகிறது.

"கனடா மீது அமெரிக்கா விதித்துள்ள சுங்கத் தீர்வைகளால் ஒன்ராறியோ தொடர்ந்து குறிப்பிடத்தக்க பொருளாதார நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டு வருகிறது. இருப்பினும், தொழிலாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களைப் பாதுகாப்பதற்கும், எதிர்காலத்திற்காக வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கும் எங்கள் அரசாங்கத்திடம் ஒரு திட்டம் உள்ளது" என்று அமைச்சர் Bethlenfalvy தெரிவித்தார். “பொறுப்பான நிதி மேலாண்மையின் மூலம், எதிர்கால வேலைவாய்ப்புகளை ஈர்த்து, முக்கிய பொதுச் சேவைகளைப் பாதுகாத்து, மேலும் நிச்சயமற்றதாகி வரும் உலகப் பொருளாதாரத்தில் நமது மாகாணம் போட்டித்தன்மையுடன் நிலைத்திருப்பதை உறுதிசெய்து, முக்கிய மாகாணத் தொழில்களை நாம் வலுப்படுத்துகிறோம்.”

எமது $210 பில்லியன் தொகை மூலதனத் திட்டத்தின் மூலம், பொறுப்பான நிதி மேலாண்மை மற்றும் இலக்கு சார்ந்த முதலீடுகளைச் செய்வதுடன், ஒன்ராறியோவின் உள்நாட்டுப் பொருளாதார வாய்ப்புகளை வலுப்படுத்துகிறது, உள்நாட்டு வர்த்தகத் தடைகளைக் குறைக்கிறது, தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களுக்கு ஆதரவளிக்கிறது, முக்கிய உள்கட்டமைப்பில் முதலீடு செய்கிறது, மேலும் மாறிவரும் பொருளாதார சவால்களுக்கு ஏற்பச் செயல்படத் தேவையான நெகிழ்வுத்தன்மையையும் அது பராமரித்து வருகிறது. அரசாங்கத்தின் நிதித் திட்டம், ஒன்ராறியோவின் பொருளாதாரத்தின் நீண்டகால வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை ஆதரிக்கும் அதே வேளையில், நிலையான முன்னேற்றப் பாதையையும் பேணுகிறது.

*2026 இலையுதிர் காலப் பொருளாதார அறிக்கையின்*சிறப்பம்சங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

- ஒன்ராறியோவின் பல்லாண்டு வரிச் செயல் திட்டத்தின் (Ontario's multi-year Tax Action Plan). ஒரு பகுதியான ஒன்ராறியோவின் போட்டித்தன்மை வரிக் குறைப்பு (Ontario Competitiveness Tax Cut) மூலம், ஒன்ராறியோவின் போட்டித்தன்மையை வலுப்படுத்துதல். இந்த நடவடிக்கை மாகாண வரிச் சலுகையாக $8 பில்லியன் தொகையை வழங்கும். இது, மத்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட, உற்பத்தித்திறனின் மெகா கழிவுத் (Productivity Mega Deduction) திட்டத்தின் மாகாண அளவிலான அங்கமாகும். இத்திட்டத்தின் கீழ், வணிகங்கள் பல்வேறு சொத்துகளின் 100 சதவீத மதிப்பையும் உடனடியாகச் செலவீனமாகக் கழித்துக்கொள்ள நிரந்தரமாக அனுமதிக்கப்படுவதன் மூலம், வணிக முதலீடுகளுக்கான செலவு குறைக்கப்படும். மத்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கையின் மூலம் மாகாணத்திற்குக் குறைந்தது $11 பில்லியன் தொகை கூடுதலான மூலதன முதலீடாக ஈர்க்கப்படும் என்றும், 30,000 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) $6 பில்லியன் தொகை சேர்க்கப்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. *2026-க்கான வரவு-செலவுத் திட்டத்தில்* இடம்பெற்றுள்ள விரைவுபடுத்தப்பட்ட சொத்து மதிப்பு நீக்க நடவடிக்கைகளுடன் சேர்த்துப் பார்க்கையில், வணிக முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக ஒன்ராறியோ வழங்கும் மொத்த வரிச் சலுகையானது, ஐந்தாண்டுகளில் $12 பில்லியன் தொகைக்கும் அதிகமானதாக இருக்கும்.

- மாகாணத்தின் உருக்கு (steel), வாகன மற்றும் முக்கிய கனிமத் துறைகளை வலுப்படுத்துவதற்கான புதிய $8.7 பில்லியன் தொகையிலான கனடா-ஒன்ராறியோச் செயல் திட்டத்தின் மூலம், ஒன்ராறியோவின் தொழில்துறை அடித்தளத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தி, வேலைவாய்ப்புகளையும் முதலீடுகளையும் ஈர்த்தல். இந்தத் திட்டம், U.S.-இன் சுங்கத் தீர்வைகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களையும் வணிகங்களையும் பாதுகாக்கவும், முக்கிய தொழில்துறைகளின் நவீனமயமாக்கலுக்கு ஆதரவளிக்கவும், முக்கியமான கனிம வள மேம்பாட்டிற்கு வழிவகுக்கவும் உதவும். மேலும், மேம்பட்ட உற்பத்தி, பாதுகாப்பு, எரிசக்தி, மின்சார வாகனங்கள் மற்றும் மூலோபாய உள்கட்டமைப்பு உள்ளிட்ட எதிர்காலத் தொழில்துறைகளில் ஒன்ராறியோவைப் போட்டியிடுவதற்குத் தயார்படுத்தவும் இது உதவும். உள்நாட்டு விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துதல், சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் முக்கிய முதலீடுகளுக்கு ஆதரவளித்தல் ஆகியவற்றின் மூலம், ஒன்ராறியோ மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த, மீள்திறன் கொண்ட மற்றும் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை உருவாக்கி வருகிறது.

- G7 நாடுகளில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தய பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக, ஒழுங்குமுறைச்ய சுமைகளைக் குறைப்பதன் மூலமும், வணிகங்களுக்கான அனுமதிய வழங்கும் நடைமுறைகளை விரைவுபடுத்துவதன் மூலமும், தேவையற்ற நிர்வாகத் தடைகளை நீக்குதல். இதன் ஒரு அங்கமாக, மாகாணத்தில் வணிகங்கள் தொடர்பான மொத்தம் 375 அனுமதிச்ய சான்றிதழ்களை மூன்றாண்டு காலத்திற்குள் மறுஆய்வு செய்ய உறுதிபூண்டுள்ளது. 2028 இன் இறுதிக்குள், இவற்றில் 35 முதல் 50 சதவீதத்திலான அனுமதிச் சான்றிதழ்களை நீக்குவது, எளிமைப்படுத்துவது அல்லது மாற்றியமைப்பது இதன்ய நோக்கமாகும். முதல் ஆண்டில், வணிகம் தொடர்பான 375 அனுமதிகளில் 51 சதவீதத்தை அரசாங்கம் ஏற்கனவே மறுஆய்வுய செய்துள்ளது; இதில், மறுஆய்வு செய்யப்பட்ட அனுமதிகளில் 65 சதவீதத்தை அரசாங்கம் நீக்கியுள்ளது, நெறிப்படுத்தியுள்ளதுய அல்லது மாற்றியமைத்துள்ளது. ஒன்ராறியோ, கிட்டத்தட்ட 220,000 நாட்கள் மதிப்புள்ள அனுமதிச் செயலாக்க நேரங்களையும் நீக்கி, முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் செயலாக்கத்தைய விரைவுபடுத்துவதோடு, தொழிலாளர் இடம்பெயர்வதற்கும்ய ஆதரவளிக்கிறது.

- ஏப்ரல் 2025 முதல், நீண்டகாலப் பொருளாதார மீள்தன்மை மற்றும் செழிப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை உள்ளடக்கிய, சுமார் $30 பில்லியன் தொகை மதிப்பிலான வரிச் சலுகைகள் மற்றும் தொழிலாளர்கள் மற்றும் வணிகங்களுக்கான ஆதரவு நடவடிக்கைகளை அறிவிப்பதன் மூலம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதில், ஏப்ரல் 1 முதல் ஒக்டோபர் 1, 2025 வரை, மாகாண நிர்வாகத்திற்கு உட்பட்ட குறிப்பிட்ட சில வரிகளை, வட்டியும் அபராதமும் இன்றி ஆறு மாத காலத்திற்கு ஒத்திவைக்கும் வசதியும் அடங்கும். இதன் மூலம் சுமார் 80,000 வணிகங்களுக்கு $9 பில்லியன் தொகை வரையிலான பணப்புழக்க நிவாரணம் கிடைப்பதோடு, அவர்களின் நிதிச் சுமைகளைக் குறைக்கவும் இது உதவும். வணிகங்கள் தொடர்ந்து இயங்குவதற்கும், தொழிலாளர்களைப் பணியில் தக்கவைப்பதற்கும், அவற்றின் விநியோகச் சங்கிலிகளை மீண்டும் உள்நாட்டுக்குக் கொண்டு வருவதற்கும் தேவையான முக்கிய ஆதரவை வழங்குவதற்காக, ஒன்ராறியோவின் ஒன்றிணைந்த வர்த்தக நிதியம் (Ontario Together Trade Fund - OTTF) மற்றும் ஒன்ராறியோவின் நிதிநிலைமையைப் பாதுகாக்கும் திட்டம் (Protect Ontario Financing Program - POFP) ஆகியவற்றிற்கான தகுதியையும் அரசாங்கம் விரிவுபடுத்தியுள்ளது.
- சமீபத்திய மத்திய அரசின் மேம்பாடுகளுக்கு இணையாக, ஒன்ராறியோவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வரிச் சலுகை (Ontario Research and Development Tax Credit) மற்றும் ஒன்ராறியோவின்புத்தாக்க வரிச் சலுகை (Ontario Innovation Tax Credit) ஆகியவற்றின் கீழ் மூலதனச் செலவினங்களை மீண்டும் தகுதியான செலவினங்களாகச் சேர்ப்பதன் மூலம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஆதரவை மேம்படுத்துதல்.

இதன் மூலம் அடுத்த மூன்று ஆண்டுகளில் $50 மில்லியன் தொகைக்கும் அதிகமான கூடுதல் வரி ஆதரவு கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது; இது சுமார் 700 வணிகங்களுக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் (R&D) செலவுகளைக் குறைக்க உதவும்.

- பொறுப்பான நிதி மேலாண்மை, அரசுச் செயல்பாடுகளின் திறனை மேம்படுத்துவதற்கான தொடர் முயற்சிகள், கண்காணிப்பை வலுப்படுத்துதல் மற்றும் நிர்வாகச் சுமையைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் வரி செலுத்துவோரின் பணத்தை மதித்தல். செயல்திறனைக் கண்டறிதல், பிழை, வீணடிப்பு, முறைகேடு மற்றும் மோசடியைக் குறைத்தல், முதலீட்டு விளைவுகளை மேம்படுத்துதல் மற்றும் ஒன்ராறியோ குடும்பங்கள் மற்றும் வணிகங்களுக்கு உயர்தரமான பொதுச் சேவைகளை வழங்குவதில் வளங்கள் கவனம் செலுத்தப்படுவதை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக முன்னுரிமைத் திட்டங்கள் மற்றும் சேவைகளை மறுஆய்வு செய்வது ஆகியன அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளில் அடங்கும்.
- ஒன்ராறியோ கணினி அனிமேஷன் மற்றும் சிறப்பு விளைவுகள் (Ontario Computer Animation and Special Effects - OCASE) வரிச் சலுகைக்கான தகுதி நிபந்தனைகளைப் புதுப்பிக்கும் முன்மொழிவின் மூலம் ஒன்ராறியோவின் திரைப்பட மற்றும் தொலைக்காட்சித் துறையை ஆதரித்தல். ஆதரவுச் செயல்பாடுகளை நெறிப்படுத்தவும், திரும்பப் பெறக்கூடிய பெருநிறுவன வருமான வரிக் கழிவின் 18 சதவீதத்தை திரும்பப் பெறுவதை எளிதாக்கவும், இந்த வரிக்கழிவிற்கான தகுதியைத திரைப்பட மற்றும் தொலைக்காட்சித் தயாரிப்பாளர்களுக்கு மட்டுமே என மாற்ற அரசாங்கம் முன்மொழிகிறது. இந்த முன்மொழியப்படும் அணுகுமுறை, கனடாவின் பிற அதிகார வரம்புகளில் உள்ள தகுதி நிபந்தனைகளுடன் மிகவும் நெருக்கமாக ஒத்துப்போவதுடன், ஒன்ராறியோவில் சிறப்பு விளைவுகள் (special effects) மற்றும் அனிமேஷன் செயல்பாடுகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும்.

துரிதத் தகவல்கள்

- தொடரும் பொருளாதார நிச்சயமற்ற சூழலுக்கு மத்தியிலும், ஒன்ராறியோவின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இதன்படி, உண்மையான GDPயானது, 2026 இல் 0.5 சதவீதமும், 2027 இல் 1.5 சதவீதமும் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- ஒன்ராறியோவின் நிதித் திட்டமானது, நெகிழ்வுத்தன்மையைப் பேணவும், சவாலான பொருளாதாரச் சூழல்களுக்கு ஏற்பச் செயல்படவும் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. 2026–27 இல் பற்றாக்குறை $16.9 பில்லியன் தொகையாகவும், 2027–28 இல் $12.7 பில்லியன் தொகையாகவும், 2028–29 இல் $6.7 பில்லியன் தொகையாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு, 2029–30 இல் வரவு-செலவுத திட்டம் சமநிலையை எட்டும்.
- ஒன்ராறியோவின் வனத்துறையில் $90 மில்லியன் தொகைக்கும் அதிகமான முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் அதன் போட்டித்தன்மையையும் புத்தாக்கத்தையும் வலுப்படுத்துதல்; அத்துடன், மாகாணம் முழுவதும் நீண்டகால அடிப்படையில் மரப் பயன்பாட்டை உறுதிசெய்து அதை அதிகரிக்கும் வகையிலான வன உயிரிப் பொருண்மை (forest biomass) திட்டங்களுக்கு $86 மில்லியன் தொகைக்கும் அதிகமான நிதியுதவி வழங்குதல்.
- ஒன்ராறியோ, தனது கடன் சுமையைக் கையாள்வதில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது; நிகர கடனுக்கும் GDP க்கும் உள்ள விகிதமானது, எதிர்வரும் காலப்பகுதி முழுவதிலும் அரசாங்கம் நிர்ணயித்துள்ள 40 சதவீத இலக்கிற்குள்ளேயே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2026–27 இல், வீட்டுவசதி, கல்வி, பொதுப் போக்குவரத்து, எரிசக்திச் செலவு கட்டுப்படியாகும் தன்மை, சிறுவர் பராமரிப்பு மற்றும் குடும்ப நலன்கள், அத்துடன் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கான ஆதரவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் $12.5 பில்லியன் தொகைக்கும் அதிகமான நிதியுதவியை வழங்குவதன் மூலம், குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கான செலவுகளைக்ய குறைத்தல்.
- ஒன்ராறியோவைப் பாதுகாத்தல், பொருளாதாரத்தை வளர்த்தல், முக்கியமான உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் மேம்பட்ட சேவைகளை வழங்குதல் ஆகியவற்றுக்கான திட்டத்தின் அடுத்த கட்டத்திற்கும் *2027-க்கான வரவு-செலவுத் திட்டத்தைத்* தயாரிப்பதற்கும் உதவும் வகையில், அரசாங்கம் இந்த நவம்பர் மாதத்தில் ஆலோசனைகளைத் தொடங்கவுள்ளது.

மேலதிக வளங்கள்

வாசிக்கவும் ஒன்ராறியோவின் 2026 பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு – ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்

வாசிக்கவும் ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான திட்டத்தின் சிறப்பம்சங்கள்

பின்புலத்தை (Backgrounder) வாசிக்கவும்: பொருளாதார மற்றும் நிதிக் கண்ணோட்டம்

வாசிக்கவும் 2026 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்: ஒன்ராறியோவை ப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்

---

news.ontario.ca/mof/en
Disponible en français

ஊடகத் தொடர்புகள்

Sarah Chapin
Minister Bethlenfalvy-இன் அலுவலகம்
Sarah.Chapin@ontario.ca

Scott Blodgett
தகவற் தொடர்புப் பிரிவு
Scott.Blodgett@ontario.ca